III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

O.S.569/2021

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Selvi. U.Dharani, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12-02-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : கமல் சந்த் ஜெய்ன் | Village | : |
| Father's Name | : அமர் சந்த் | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>முதல் விசாரணை</u>

நான் பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 8 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதி நிறுவனத்தின் பதிவு சான்றிதழின் நகல்.(அது பி.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). இவ்வழக்கை நடத்துவதற்கு எனக்கு அதிகாரம் வழங்கி நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.(அது பி.த.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). Ledger statement (அது பி.த.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). வாதியின் கடிதம். (அது பி.த.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). எனது நிறுவனத்தின் வங்கி கணக்கு பட்டியல்.(அது பி.த.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அந்த வங்கியின் கடிதம். (அது பி.த.சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது). 20.05.2013 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல்.(அது பி.த.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.215/2014 ன் தீர்ப்பாணையின்

சான்றிட்ட நகல்.(அது பி.த.சா.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)